# புழுக்கம்

காரை செ. சுந்தரம்பிள்ளை

எங்கும் புழுக்கம் இருக்க முடியாமல்
தங்கும் அறையின் தாழ்ப்பாளைத் தான்திறந்து
முற்றத்தை வந்தடைந்தேன்; முத்துப்போல் முல்லைமலர்
சுற்றுப் புறமெல்லாம் சூழ்ந்து மணம் பரப்பிக்
காந்தம்போலே யிழுக்க, கற்பனையில் நடைஆழ்ந்தேன்.

சாந்தி கிடைக்காமல் தவியாய்த் தவிக்கின்ற
மாந்தர் நிறைந்துள்ள மண்ணுலகைச் சுற்றிவந்தேன்.

பொங்கும் கவலையினால் புழுங்கி மனம் வாடுகிற
தங்கும் உலகமக்கள் தாழ்வதனைப் பார்க்கின்றேன்,
அறையில் புழுக்க மென்றால் அதைநாங்கள் மாற்றிடலாம்
வறுமைப் புழுக்கத்தை மாற்றவழி யறியோம்.

காற்றுப் புகாத சூழல் கஞ்சியறியா வயிறு
மாற்றுத் துணியற்று வாழும் வறுமைநிலை
மருத்துவத்தைக் கற்கின்ற மாணவர்கள் வைத்திருக்கும்
உருக்குலைந்த எலும்புக் கூடோடி நடமாடுதல்போல
தெருவெங்கும் திரிகின்ற சிறுமை யடைந்தவர்கள்
உள்ளம் புழுங்கி உருகும் கொடுங்காட்சி
தெள்ளத் தெளிவாய்த் தெரிகிறது
ஆனாலும்—
சந்திரனை நாமடைந்து தாள்பதித்த பிற்பாடு
கந்தைநிலை மாற்றக் கதியற்று நிற்கின்றோம்.

உலகெங்கும் பேசுவதை உடனேயே கேட்பதற்கும்
தொலைக் காட்சி அத்தனையும் சுடச்சுடவே பார்ப்பதற்கும்
நிலத்தைக் குடைந்ததனை நிறைய அறிவதற்கும்
அலைமோதும் கடலடியை அணுவணுவாய் ஆய்வதற்கும்
கலைகள் வளர்ந்த பின்னும் கவலை மறையவில்லை.

வறுமையில்லை யென்றாலும் வாடிப் புழுங்குகின்ற
சிறுமை நிலை ஒரு சிலர்க்குத் தினமும் நடக்கிறது

ஓதியுணர்ந்தவர்கள் உள்ளம் மிக வருந்தும்
பாதி படித்தவர்கள் பதவியிலே தானிருக்கும்
நீதி நடப்பதினால் நெஞ்சம் புழுங்கிறது

பணவலியால் உடல் வலியால் பாமரரை அச்சுறுத்திப்
பிணமாக வாழவைக்கும் பேய்கள் பெருகுவதால்
கதியின்றி உள்ளமது கசங்கிப் புழுங்கிறது.
புதிதான நாட்டுக்குப் புக வைத்துக் காசுபணம்
நதியாக வந்தமைய நான் வைப்பேன் என்று சொல்லி
ஏஜன்ஸி வேலை இருந்தபடியே தான் பார்த்துக்
காசு பறித்துக் கல்வீடுதான் கட்டி
வாசஸ்தலம் பெருக்கி வயல் தோட்டம் கார் வாங்கி
நாசம் புரிந்து குடி நாசமே செய்தவரால்
கும்பி யெரிபவர்கள் கொதித்துப் புழுங்குகிறார்

பொய்ச் சாட்சி சொல்பவர்கள் போலிகளை விற்பவர்கள்
கற்புள்ள பெண்களுக்குக் களங்கம் உரைப்பவர்கள்
மொட்டைக் கடித மன்னர் மூட்டிவிடும் பேர்வழிகள்
அத்தனை பேராலும் ஆவி புழுங்கிறது

எங்கும் புழுக்கம் இருக்க முடியவில்லை
தங்கும் உலகமெலாம் தாங்க முடியாப் புழுக்கம்
ஆதிப் பரம் பொருளும் அத்தனையும் பார்த்த வண்ணம்
மோதுகிற விதியிதென்றோ மோனத் திருக்கிறது.